பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**24 01 2026 SATURDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கான அங்கீகாரத்தை உறுதி செய்துள்ளதாக மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

**2)** வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நோக்கில், ரோஜ்கார் மேளா திட்டத்தின்மூலம் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு மத்திய அரசு பணி வழங்கப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

**3)** தமிழகத்தில் **2** ஆயிரத்து **200** கிலோமீட்டர் தூர கிராம சாலைகள் மேம்படுத்தப்படும் என்பது உள்ளிட்ட அறிவிப்புகளை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று பேரவையில் வெளியிட்டார்.

**4)** தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு மிகவும் சீர்கெட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

**5)** ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யூகி பாம்ரி - ஸ்வீடனின் **Andre Goransson** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கான அங்கீகாரத்தை உறுதி செய்துள்ளதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

தேசிய பெண் குழந்தைகள் தினத்தையொட்டி, அவர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், பிரதமரின் சீரிய வழிகாட்டுதலின்பேரில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும், அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்யவும் அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

பெண் குழந்தைகள் சமுதாய வளர்ச்சியின் வலிமையாகவும், அடித்தளமாகவும் உள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெண் குழந்தைகளுக்கான கல்வி, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிசெய்வதன் மூலம் வலிமையான இந்தியாவை உருவாக்க முடியும் என்றும் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நோக்கில், இளைஞர்களுக்கு ரோஜ்கார் மேளா எனப்படும் வேலைவாய்ப்புத்

திட்டத்தின்மூலம் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மத்திய அரசு பணிகளுக்கான நியமன ஆணைகள் வழங்கப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாடு முழுவதும் 45 பகுதிகளில் இன்று நடைபெற்ற 18-ஆவது வேலைவாய்ப்பு திருவிழாவில் 61 ஆயிரம் பேருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி வாயிலாக பணிநியமன ஆணைகளை வழங்கியதாக கூறியுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக, சென்னை ஆவடி பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், புதிய வேலைவாய்ப்பை பெற்றுள்ள இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை தாம் வழங்கியதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

தமிழ்நாடு பள்ளிகள் கட்டண முறைப்படுத்துதல் சட்டத் திருத்த மசோதா, தமிழ்நாடு ஊராட்சிகளில் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிப்பதற்கான மசோதா உள்ளிட்ட ஒன்பது மசோதாக்கள் இன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டன.

வேளாண் விளைப்பொருட்கள் சந்தைப்படுத்துதலை முறைப்படுத்துவதற்கான மசோதாவும் இன்று நிறைவேற்றப்பட்டது.

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி பிச்சை எடுப்பதை தடுப்பதற்கான மசோதாவும் இன்று பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

<<<<<<<>>>>>>>

தமிழக சட்டப்பேரவையில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று சில அறிவிப்புகளை வெளியிட்டார்.

கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், புதிதாக 2 ஆயிரத்து 200 கிலோமீட்டர் தூர சாலைகள் மேம்படுத்தப்படும் என்று அவர்அறிவித்தார்.

50 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் மேலும் ஒரு லட்சத்து 80 ஆயிரம் பேருக்கு வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இதன்பின்னர், சட்டப்பேரவை நடவடிக்கைகள் இன்று மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு மிகவும் சீர்கெட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு காவல்துறை மீதோ, அரசின் மீதோ எவ்வித அச்சமும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் காவல்துறையை தன்னிச்சையாக செயல்பட அனுமதிக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்சி — சென்னை நெடுஞ்சாலையில் காவல்துறை வாகனத்தின் மீது மர்ம நபர்கள் நாட்டு வெடிகுண்டு தாக்குதல் நடத்தியதில் நான்கு காவலர்கள் படுகாயமடைந்துள்ளதையும் திரு எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>

நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணி நீர்வாழ் பறவைகள் கணக்கெடுக்கும் பணி இன்று தொடங்கியது.

இப்பணியில் ஈடுபட்ட தன்னார்வலர் திரு மதிவாணன், இப்பணிகள் நாளையும் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவித்தார்.

***(Voice Byte —மதிவாணன் - 43 Sec.)***

<<<<<<>>>>>>

திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகம் இம்மாவட்டத்திற்கென ஒரு தனித்துவமான பறவை இனத்தை தெரிவு செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இதற்கான வாக்கெடுப்பு பொதுமக்களிடமும், மாணவர்களிடமும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — அனுராதா - 44 Sec.)***

*<<<<<<<>>>>>>>*

தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்தில் லேசானது முதல், மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், அடுத்த 24 மணிநேரத்தில் செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் - 50 Sec.)***

*<<<<<<<>>>>>>>*

சென்னையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் மாற்றுத் திறனாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் நாற்காலி வண்டிகளை மாநில அமைச்சர் திரு சேகர்பாபு வழங்கினார்.

-----------------

இந்திய கடலோர காவல்படையின் 50-ஆவது நிறுவன தினத்தை முன்னிட்டு, சென்னை கடலோர காவல்படை கிழக்கு மண்டலம் சார்பில், மோட்டார் சைக்கிள் பேரணி இன்று நடைபெற்றது.

-----------------

கடலூர் மாவட்டம் புவனகிரி வட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வளமிகு வட்டார வளர்ச்சித் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் திரு ஆதித்யா செந்தில்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

------------------

அரியலூரில் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ரங்கோலி கோலமிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

---------------

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து பிரதான கால்வாயில் பாசனத்திற்காக இன்று தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யூகி பாம்ரி - ஸ்வீடனின் **Andre Goransson** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை **4-6, 7-6, 6-3** என்ற செட்கணக்கில் மெக்ஸிகோவின் **Santiago** — நெதர்லாந்தின் **David Pel** இணையை வென்றது.

--------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் தில்லி அணி — பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இரவு மணி **7.30**-க்கு தொடங்குகிறது.

**<<<<<<<END>>>>>>>**